Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

SEP 1971

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 224

சாதாரண புரட்டாதி 7 ஷவ்வால் 2 வியாழக்கிழமை (23-9-71)

மணமும், குணமும், சுவையும்
நிறைந்தது
பிறேமா தேயிலை
பற்களுக்கு வெண்மையும் உறுதியும்
கொடுப்பது
பிறேமா பற்பொடி
நல்ல தரத்தில் தயாரித்து
வெளியிடும்
எவர் பிறைற் சோப்
இன்றே வாங்கிப்பாவியுங்கள்
உள்ளூர்த் தொழிலை
நீங்களும் ஆதரியுங்கள்
பிறேமா தொழிற்சாலை
V. M. ரோட், பருத்தித்துறை.

'உதவிகளால் மட்டும் கி. வங்க பிரச்னையை தீர்க்க முடியாது'

சர்வதேச ஆட்சிமன்ற மகாநாட்டில் வி.என்.

பாரிஸ், செப். 22

"வங்காள அகதிகளின் பிரச்சினை அரசியல் பிரச்சினை. உலக நாடுகள் உணவு, உடை நிதிஉதவி ஆகியவைகளை வங்காளத்துக்குச் செய்வதினால் மட்டும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசியல் தீர்வு ஒன்று கட்டாயம் ஏற்பட வேண்டும்"

பாரிஸில் நடைபெற்ற சர்வதேச ஆட்சிமன்ற பிரதிநிதிகள் மகாநாட்டில் இலங்கைக் கோஷ்டியில் ஒருவராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி ஆட்சிமன்ற அங்கத்தவர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

உலக நிறுவனமாகிய இந்த ஆட்சிமன்ற சங்கம் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு பாகிஸ்தானின் தற்போதைய ஆட்சிமுறை குறித்து விமர்சிப்பதோ அதைக் குறை கூறுவதோ தேவையற்றதொன்றாகும் அத்துடன் அது புத்திசாலித்தனமுமல்ல. இதே வேளையில் இந்த விவகாரத்தை நாம் உள்நாட்டு விவகாரம் எனக் கூறிவிடக் கூடாது. வங்காள சம்பவங்களின் விளைவுகளை எண்ணிப்பார்த்து உடனடியாக ஒரு தீர்வு எடுக்காவிடில் ஆசிய பிராந்தியத்தின் அமைதிக்கு அழிவு ஏற்படுவது திண்ணம். வங்கப் பிரச்சினைக்கு உட

(6-ம் பக்கம் பார்க்க

'இனஒழிப்பு நடவடிக்கையை பாக். கைவிடவேண்டும்'

யாழ். மாநகரசபையில் பிரதமரை வற்புறுத்தக் கோரும் பிரேரணை

யாழ்ப்பாணம், வியா.

வங்காளதேசத்தில் காட்டுமிராண்டித்தனமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இன ஒழிப்பு நடவடிக்கைகளை பாகிஸ்தான் இராணுவம் உடனடியாக நிறுத்தவேண்டுமென்று பாகிஸ்தான் அரசாங்கத்தை கூட்டரசாங்கம் வற்புறுத்த வேண்டும் என பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையொன்று யாழ் மாநகரசபை கூட்டத்திற்கு வருகிறது.

மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் இம்மாதம் 27-ம்திகதி நடைபெறவிருக்கும் யாழ். மாநகரசபை கூட்டத்தில் திரு. என். கி. செல்லத்துரை மேற்கண்ட பிரேரணையைக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

அப்பிரேரணையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: வங்காள தேசவிடுதலைப் போராட்ட விடயத்தையும், பாகிஸ்தான் அங்கு நடத்திவரக்கூடிய இன ஒழிப்பு நடவடிக்கைகளையும் இலங்கைப் பிரதிநிதி ஐ. நா. வில் எழுப்ப வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் அவரைப்பணிக்க வேண்டுமென்றும் பிரதமரை மேலும் கேட்டுக்கொள்

(6ம் பக்கம் பார்க்க)

பரிசுத்த பாப்பரசரை நவரத்தினம் சந்திப்பார்

லண்டன் செப். 22

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரைச் சந்திப்பார். பாப்பரசரை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாரிஸில் நடந்த சர்வதேச ஆட்சிமன்ற பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்துகொண்ட சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் இப்போது லண்டனில் தங்கியுள்ளார். பாரிஸில் இருவாரகாலம் நடந்த மகாநாட்டில் கலந்துகொண்டார்.

லண்டனில் திரு நவரத்தினத்திற்கு லண்டனில் வசிக்கும் தமிழ் இளைஞர்கள் சிறப்பான வரவேற்பொன்றை அளித்தார்கள்.

லண்டனில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பங்களா தேஷ் மிஷனுக்கு திரு நவரத்தினம் விஜயம் செய்தார். அந்த மிஷனுக்கு விஜயம் செய்த முதல் வெளிநாட்டவர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

லண்டனில் தமிழ் இளைஞர்கள் நடாத்தும் பல்வேறு வைபவங்களில் கலந்துகொண்ட சாவகச்சேரி எம். பி. இம்மாதம் 26-ம் திகதி லண்டனில் நடக்கும் சரஸ்வதி பூஜையிலும் கலந்துகொள்கிறார்

லண்டனிலிருந்து ரோம் செல்லும் திரு நவரத்தினம் அங்கு வத்திக்கானில் பாப்பரசரைச் சந்திப்பார் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாதம் 28-ம் திகதி நாடு திரும்புவார்.

மரண அறிவித்தல்

வி. பழனிப்பிள்ளை

வல்வெட்டித்துறைப்பகுதிக்கு "ஈழநாடு" நிருபராகக் கடமையாற்றிய திரு. வி. பழனிப்பிள்ளை நேற்றுக் காலமாகிவிட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று காலை அல்வாயில் நடைபெறும்.

வடபகுதித்துறைமுக தொழிலாளரின் சாதனை!

அரசுக்கு ரூ. 1 லட்சத்து 40 ஆயிரம் லாபம் தேடிக்கொடுத்தார்கள்!

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதித் துறைமுகத் தொழிலாளர் பொருட்களை இறக்கும்வேலையில் மிகப்பெரிய வெற்றியொன்றினை ஈட்டியதன் மூலம் அரசாங்கத்துக்கு சுமார் ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபாய் லாபத்தைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள்.

கப்பலிலிருந்து அரிசி இறக்கி முடிக்கவேண்டிய கடைசித் தினத்துக்கு ஏழு நாட்கள் முன்பதாக இறக்கி முடித்ததன் மூலம் பெரிய சாதனையொன்றைச் செய்து லாபத்தை ஈட்டிக்கொடுத்திருக்கிறார்கள்.

பர்மாவிலிருந்து 1 லட்சத்து 40 ஆயிரம் மூடை அரிசியுடன் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்த 'ஓஷன் என்டர்பிறைஸ்' என்ற கப்பலிலிருந்து அரிசி மூடைகள் இறக்கப்படவேண்டிய கடைசிநாள் இம்மாதம் 28-ம் திகதி ஆகும். ஆனால் துறைமுகத்தொழிலாளர் இன்றுடன் அரிசி இறக்கும் வேலையை முடித்துவிட்டார்கள். ஏழு தினங்களுக்கு முன்னர் இந்த வேலையை முடித்துவிட்டதால் சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அரசாங்கத்துக்கு எஞ்சியிருக்கிறது.

பருத்தித்துறை துறைமுகத்தில் கொழும்பு, திருகோணமலை போன்ற துறைமுகங்களைப் போன்ற நவீன வசதிகளில்லா திருந்தும் தொழிலாளர்கள் தோளில் சுமந்தே இந்தச் சாதனையைச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறையைச் சேர்ந்த தனியார் கம்பனியொன்றைச் சேர்ந்த தொழிலாளர்களே இந்தச் சாதனையைச் செய்தார்கள்.

பயங்கரவாத நடவடிக்கைக்கு

பொருளாதாரப் பிரச்னையே காரணம்

— செனட்டர் நடேசன்

கொழும்பு, புதன்

நாட்டில் பெரும்பாலானவர்கள் எதுவித விசாரணையுமின்றி தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் சிலர் பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபட்டிருக்கலாம், இன்னும் சிலர் சில அரசியல் கட்சிகளின் செயல்களில் பங்குபற்றியதை வைத்து பாதுகாப்பென்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு இன்று செனட்டில் பேசிய திரு. எஸ்.

(6-ம் பக்கம் பார்க்க)

லிடோ [யாழ்நகர்]

(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)
கிங்ஸ்லி (கொழும்பு

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
கதை - வசனம் - டைரக்ஷனில் உருவாகி

ஜெமினி—வாணிஸ்ரீ — முத்துராமன்

சுந்தரராஜன் - நம்பியார்—நாகேஷ் - வாசு
நடித்த

தபால்காரன் தங்கை

உள்ளத்தைத்தொடும் 6—வதுவாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00

தெய்வ மகன்

சிவாஜி
[3 மாறுபட்ட வேடங்களில்]
ஜெயலலிதா
நம்பியார் — நாகேஷ்
சுந்தரராஜன்
நடித்தது.

நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
தினசரி: 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
BECAUSE OF EVE

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-காஞ்சனா
நடித்த
'சாந்தி நிலையம்'
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி சினிமா

மானிப்பாய்
பி. ப. 2-30, 6-30, 10-00
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
கன்னிப் பெண்

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat, Sunday 10-30 a.m.
Client Eastwood
in
TWO MULES FOR SISTER SARA
(Cinemascope color)

தினசரி 2-00, 9-45
எம் ஜி ஆர்-ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி
(புதியகொப்பி)

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat, Sundays 10-30 a.m.
Jery Lewis
in
WHICH WAY TO THE FRONT

தேவை

பரந்தன்முல்லைத்தீவுரோட்டில் சுண்டிக்குளம் சந்திக்குக் கிட்ட உள்ள கமத்தில் வேலைசெய்யவும் இராக்காவலுக்கும் ஆக நற்சாட்சிப் பத்திரத்துடன் ஒருவர் தேவை நேரில் வரவும். ஆ' ஐயம்பிள்ளை, நீலிப்பந்தனை, காரைநகர். 3602

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் கூட்டுப்பண்ணை ஒன்றுக்கு தலை ரூபா 250/- முதலீடு செய்யக்கூடிய 25 வயதுக்கு உட்பட்ட வாலிபர்கள் தேவை. எல்லா வேலைகளும் செய்யக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். விரும்பியவர்கள் 5-10-71 க்கு முன் வீ. விக்கியம் ஞானசங்கரி, கண்டி ரோட், கிளிநொச்சி என்னும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 3603

ஆங்கில அறிவுள்ள லிகிதர் (Clerk) தேவை. பிணை கட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும். 27-9-71க்குமுன் விண்ணப்பிக்கவும். திருச்செல்வம் அன் கோ, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 3604

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வரி விளம்பரம்

காலம் பெறுமதியானது: ஒரு சைக்கிள் மின்னலைச் சலவைப்பவுடரில் அநேக துணிகளை சலவைசெய்யலாம். வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மின்னலைச் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

விற்பனைக்கு

ராதா தசாங்கம் கோவில்களிலும் விழாக்களிலும் வீட்டில் தூபமிடுவதற்கும் உபயோகமானது. சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. டி. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3523

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிநேகிதி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்!
ரி. எம். சௌந்தரராஜன்
நடித்த

கல்லும் கனியாகும்

எல்லாப் பத்திரிகைகளும் ஏகோபித்துப் பாராட்டும் ஒரே படம்!

மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்ளும் மகத்தான குடும்பச் சித்திரம்!!

✶ தாய் என்பவள் தந்தை ஆகலாம்-தனயன் ஆகலாம் - ஆசான் ஆகலாம்-ஆண்டவன் ஆகலாம்!

✶ எந்த ஒரு இடத்தையும் தாயால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் வேறு எவராலும் தாயின் புனிதமானஇடத்தை ஈடுசெய்யவே முடியாது.

✶ கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியாது என்பதால்தான் உலகில் தாயைப் படைத்தார்!

✶ தாய் என்பவள் காவியம்!
இது ஒரு தாயின் கதை!!
ஆகவே இது காவியத்தின் கதை!!!



யாழ்.வின்ஸர் வெண்திரையில்

இன்று 23—9—71 முதல்
தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினி கணேசன் ★
★ சௌகார் ஜானகி ★
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன்-எம். ஆர். ஆர். வாசு
எஸ். வரலட்சுமி — வி.எஸ்.ராகவன்
பேபி டாலி
நடித்த

காவியத் தலைவி

கதை-வசனம்-டைரக்ஷன்:-கே. பாலச்சந்தர்

பாரதத்திலுள்ள கிழக்கு வங்க

அகதிகள் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்!

மண்டலசார்பற்ற நாடுகள் வற்புறுத்து

லண்டன், செப் 23

பங்களாதேஷ் அகதிகள் தாயகம் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என மண்டல சார்பற்ற நாடுகளின் 74 பிரதிநிதிகள் அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பாரதத்துக்குள் தஞ்சம் புகுந்திருக்கும் லட்சக்கணக்கான அகதிகள் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்று வற்புறுத்தியுள்ள அதே சமயம் அகதிகள் தமது தாய்நாட்டுக்குத் திரும்பிச் சென்று அமைதியான வாழ்க்கை நடாத்தக் கூடிய வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டு என்றும் கேட்டுள்ளன.

மனித உரிமைகளுடன், மனிதாபிமானத்துடன் கிழக்கு வங்க அகதிகள் வாழக் கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று மண்டல சார்பற்ற நாடுகளின் பிரதிநிதிகள் கோரியுள்ளனர்.

மண்டல சார்பற்ற நாடுகளின் மகாநாடு இம்மாதம் 30ந் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. அம்மகாநாட்டில் பங்களாதேஷ் பிரச்னை முக்கிய பிரச்னையாக விவாதிக்கப்படவுள்ளது

கிழக்கு வங்கத்தில் ஏற்பட்டுள்ள இனக்கொலைக்கு முடிவான அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்பதை மகாநாடு வற்புறுத்தும்.

ஐ.நா.பொதுச்சபை கூட்டத் தலைவர் மாலிக்

ஐ. நா. (நியூயோர்க்) செப்ரெம்பர் 22

ஐ. நா. பொதுச்சபையின் 26-வது தொடர் கூட்டத்தின் தலைவராக இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி ஆதம்மாலிக் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டம் நேற்று ஆரம்பமானது. மத்திய கிழக்குப் பிரச்னை சீனாவை ஐ. நா. வில் சேர்த்துக் கொள்ளும் பிரச்னை, கிழக்கு வங்கப் பிரச்னை ஆகியன இம்முறைக் கூட்டத்தொடரில் முக்கிய அம்சங்களாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் படவிருக்கின்றன.

சீனாவை ஐ.நா.வில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை அமெரிக்கா இவ்வார இறுதியில் ஐ.நா. சபைக் கூட்டத்தில் தாக்கல் செய்யும்.

'பென்சிலின்' மருந்தின் 30-வது ஆண்டுவிழா

லண்டன், செப் 22

உயிர்காக்கும் அற்புத மருந்தான 'பென்சிலின்' இவ்வருடம் தனது 30-வது விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது.

'பென்சிலின்' இன்று எமக்கு ஒரு சாதாரண மருந்தாகிவிட்டது. ஆனால் இம் மருந்து தான் சிகிச்சை முறையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உண்டாக்கியது என்பது பலருக்குத் தெரியாதிருக்கலாம்.

காயங்களில் அல்லது சிறு வெட்டுக் காயங்களில்கூட "ஸ்ரபைலோக்கி" என்ற நோய் நுண்மங்கள் பற்றிக் கொண்டால் போதும் இரத்தம் நஞ்சாகி நோயாளிகள் மடிந்துவிடுவார்கள். இந்த நோய் நுண்மக் கிருமிகள் காயங்களில் புகாமல் இருக்கவும் அப்படிப் புகுந்தபின் இரத்தத்தை நஞ்சாக்காமல் இருக்கவும் முப்பது வருடங்களுக்குமுன் எவ்வித மருந்தும் கண்டுபிடிக்கவில்லை.

இத்தருணத்தில்தான் பென்சிலின் கைகண்ட மருந்தாக உதவிற்று. பென்சிலின் கண்டுபிடிக்கப்பட்ட விதமே அலாதிதான். 1928-ம் ஆண்டில் சேர் அலெக்சாந்தர் பிளெமிங், நோய்நுண்மங்களைக் கொண்ட தன் ஆராய்ச்சிப் பேழைக்குள் இரத்தத்தை நஞ்சாக்கும் 'ஸ்ரபைலோக்கி' கிருமிகளை வைத்து அவதானித்து வந்தார். ஒரு நாள் இந்தப் பேழைக்குள் பென்சிலியம் என்ற ஒருவகைப் பாசி படர்வதைக் கண்டார். அப்பாசியில் இருந்து வெளியாகிய திரவம் 'ஸ்ரபைலோக்கி' கிருமிகளையும் நுண்மங்களையும் அழிப்பதற்குப் பாவித்தால் என்ன என்று திட்டமிட்டது சேர் அலெக்ஸாந்தரின் மனம். அப்பாசியில் இருந்து வெளிப்பட்ட திரவகத்திற்கு பென்சிலின் என்று பெயரிட்டார் அவர்.

1935-ல் சேர் அலெக்ஸாந்தர் பிளெமிங்கின் யோசனையைப் பரீட்சித்துப் பார்க்கும் அளவுடைய பென்சிலின் திரவம் கிடைத்தது. ஆக்ஸ்போர்ட் விஞ்ஞானிகளான சேர் ஹோவார்ட் புளோரி, சேர் ஏர்னஸ்ட் செயின் ஆகியோரின் ஒருமித்த முயற்சியின் பயனாக எலிகள் மீது பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இப்பரிசோதனைகள் அளித்த அமோக வெற்றியை அடுத்து அமெரிக்காவில் வர்த்தகரீதியில் பென்சிலின் உற்பத்தி ஆரம்பமாயிற்று.

நோயாளியை எவ்விதத்திலும் பாதிக்காது காயங்களில் உள்ள நோய்நுண்மங்களை மட்டும் பிரித்தெடுத்து அவற்றை முற்றாக அழித்துவிடும் சக்தி பென்சிலின் தனிச் சிறப்பாகும்.

லண்டனில் உள்ள இராணி மேரி ஆஸ்பத்திரியில்தான் பென்சிலின் முதன்முறையாக மனிதரில் பாவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பென்சிலின் மருந்தால் புத்துயிர் பெற்று சுகவாழ்வு நடாத்தும் மக்களின் தொகை எண்ணிலடங்காது என்றே சொல்ல வேண்டும்;

கொப்பரா விற்பனையாளர்களுக்கு
அறிவித்தல்

நாம் இப்பொழுது கொப்பரா கொள்வனவு செய்து வருகின்றோம். ஆகவே கொப்பரா வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சி. எஸ். கே. மில்ஸ்.
யாழ்ப்பாணம்.

மன்னாரில் நாளை சிறுவர் சித்திரக்காட்சி

மன்னார், புதன்

மன்னார் மாவட்டப் பாடசாலைகளின் சிறுவர் சித்திரக் காட்சி மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் இம்மாதம் 24-ம் திகதி காலை ஆரம்பமாகிறது. மன்னார் அரசாங்க அதிபர் திரு எஸ். கதிர்காமநாதன் காட்சியைத் திறந்து வைப்பார். காட்சி 24-ம் திகதியும், 25-ம் திகதியும் இருதினங்கள் நடைபெறும்

வாராந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியா

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் சொற்பொழிவுகள் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் ஆதீனச் சொற்பொழிவுக் குழுவினர் வாரந்தோறும் சொற்பொழிவாற்றுவர்.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம், பிரமஸ்ரீ வ. குகசர்மா அருட்கவி வி. விநாசித்தம்பி வித்துவான் க. கணபதிப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவுக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

நவராத்திரி கலைவிழா

கோட்டை, புதன்

நிலஅளவைப் பகுதி இந்து சங்கத்தினரது 6-வது நவராத்திரிக்கலைவிழா இம்மாதம் 24ம் திகதி மாலை நாரகென்பிட்டியிலுள்ள தலைமைக் காரியாலய வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திரு செ வன்னியசிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் முன்னாள் உபசபாநாயகர் திரு மு சிவசிதம்பரம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். இச்சங்கத்தினரால் பிரசுரிக்கப்படும் விழாவில் வாணி என்னும் சஞ்சிகையும் சிறப்புமலராக வெளியிடப்படும்.

நியமனம்

யாழ்ப்பாணம், வியா.

ஏழாலை உபதபாற் கந்தோருக்கு திரு தம்பு சிவஞானசுந்தரம் தபாலதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் இத்தபாற் கந்தோரிலேயே பதிலதிபராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

முஜிபூர் மீதான விசாரணை தொடர்ந்து நடக்கிறதாம்

கராச்சி, செப். 22

கிழக்கு வங்கத் தலைவர் ஷேக் முஜிபூர் ரஹ்மான் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருவதாக அரசைச் சேர்ந்த அதிகாரியொருவர் முதல் முறையாக தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளின்மீது முஜிபூர் ரஹ்மானும் மற்றும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் ராணுவ நீதிமன்றத்திலே விசாரணை செய்யப்படுவார்கள் என யாஹ்யாகான் அறிவித்திருந்தார். இதன் பின்னர் விசாரணை சம்பந்தமான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

எல்லைக்கப்பாலிருந்து வரும் செய்திகளை ஆதாரமாக வைத்து, முஜிபூர் மீதான விசாரணை முடிவடைந்து விட்டதாக அகில இந்திய வானொலி அறிவித்திருந்தது.

ஆனால் இப்போதைய அரசு அதிகாரியின் தகவலின்படி விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

"ஆலயங்களில் சினிமா பாட்டு மாசு ஏற்படுத்துகிறது"

தம்பிரான் சுவாமிகள் கவலை

மாவிட்டபுரம், புதன்

"இன்று நமது சைவாலயங்களில் மெல்லிசைக்குழுக்களை அழைத்தும் நாகசுரக்காரர்மூலம் சினிமாப்பாடல்களை இசைப்பித்தும் ஒலிபெருக்கி மூலம் சினிமாப் பாடல்களை ஒலிபரப்பியுமே ஆலயங்களின் பக்திச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தப்படுகிறது இம்மாசு நீங்கி ஆலயம் புனிதமடைய வேண்டுமானால் ஆலய தர்மகர்த்தாக்களும் உற்சவகாரர்களும் இணைந்து இப்படியான நிகழ்ச்சிகள் இடம்பெறாது செய்ய வேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலய விழாவில் கலந்து சொற்பொழிவு நிகழ்த்திய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் கூறினார்.

ஆலய முன்றலில் கல்வி இலாகா அதிகாரி திரு. எம். எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த சொற்பொழிவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்று தேவாலயங்களின் சம்பிரதாயத்தை மாற்றி மெல்லிசை பாணிகளை தேவாரங்களுக்குள் புகுத்தி இருக்கிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து இறைசக்தி உடையோராய் விளங்கிய நால்வர் ஆக்கிய தேவாரங்கள் பண்ணுடன் மிளிர்கின்றன. ஆனால் இன்று அப்பண் எல்லாம் நீக்கப்பட்டு சினிமா பாணியில் பாடும் வழக்கம் தலையெடுத்துள்ளது நாயன்மாருக்கு பிந்தி வாழ்ந்த தியாகராஜரின் சாகித்தியத்துக்கு அவர் வகுத்த அமைப்புகளையோ ராகங்களையோ இன்றுள்ளவர்கள் மாற்றினார்களா? தியாகராஜருக்கு முன்பு வாழ்ந்த நாயன்மார்களின் தேவாரத்தில் ஏன் கைவைத்தார்களோ தெரியவில்லை. இன்றுள்ளவர்கள் கூட பண்டைய முறையை விட்டு மெல்லிசைப் பாணியில் தேவாரங்களைப் பாடுகிறார்கள்.

'இறை நம்பிக்கையால் எல்லா நன்மையும் கிட்டும்'

சுழிபுரம், புதன்

"இன்றைய உலகில் மதப்பற்று நலிவுற்றுவருகிறது. ஒவ்வொருவரும் தன்னையே உணர்ந்து எல்லாவற்றுக்கும் மேலான இறைவன் மேல் நம்பிக்கைகொள்ள வேண்டும். இதனால் எல்லா நன்மைகளும் கிட்டும்" என்று சில்லாலை புனிதயாகப்பர் ஆலயத்தில் தனது முதற் பலி பூசையை நிறைவேற்றிய வண. பிதா அருளானந்தம் தமது சொந்த ஊரான சில்லாலையில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வரவேற்பு விழாவுக்கு மேற்படி ஆலய பங்குக் குரவர் வண. பிதா எம். ஜ. பயஸ் தலைமை தாங்கினார். விழா ஆரம்பமாவதற்கு முன்னர் அடிகளார் பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து மேளதாளங்களுடன் அழைத்துவரப்பட்டார். வண பிதா தமது முதற்பூசைப் பலியை யாழ். துணை மேற்றிராணியார் அன்ரனி ஆண்டகை முன்னர் நிறைவேற்றினார்.

"இறைவனை அடையும் வழி சுலபமானதல்ல. எவ்வளவோ துன்பச் சுமைகளைத் தாண்டவேண்டும். எமது இளம் வாலிப சமுதாயம் இறைவனை அடையத் தெண்டிக்க வேண்டும்" என்று வண. பிதா அருளானந்தம் சொன்னார்.

திரு. எஸ்.ஜோசப் பங்கிராஸ், திரு. புவிராசசிங்கம் உட்பட வேறு பலரும் பேசினர்.

ஆசிரியராக நியமனம்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கையில் மட்டுமன்றி மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச்சென்று சங்கீத கதாப்பிரசங்கங்கள் நிகழ்த்திப் புகழ்பெற்ற பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா பண்டாரவளை செல். மேரிஸ் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம்பெற்றுள்ளார்.

கல்விச் சுற்றுலா

சுழிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த ஐம்பதுபேர் கொண்ட மேல் வகுப்பு மாணவர் கோஷ்டியினர் தமது இருநாள் கல்விச் சுற்றுலாவை முடித்துக்கொண்டு திரும்பினர். கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு போன்ற இடங்களுக்குச் சென்று தொழிற்சாலைகள் விவசாய கால் நடைப் பண்ணைகள், ஆலைகள் இவர்கள் பார்வையிட்டனர்.

விற்பனைக்கு
ஏச்—4
விதைநெல்
தொடர்புகொள்ளவும்:-
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.

பண்டத்தரிப்பு கி.சபையில் 6 உறுப்பினர் வெளி நடப்பு

சுழிபுரம், புதன்

நேற்றுநடைபெற்ற பண்டத்தரிப்புக் கிராமசபையின் விசேஷ கூட்டத்தில் மாதகல் கிராமத்தைச்சேர்ந்த ஆறு அங்கத்தவர்கள் வெளி நடப்புச்செய்தனர். இக்கூட்டத்தில் 1972-ம் ஆண்டுக்கான பொதுநிதி வேலைகளுக்கான பண ஒதுக்கீடு சம்பந்தமான பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 4-ம் வட்டார அங்கத்தவர் திரு.எல்.எக்ஸ் கி. சந்திரசேகரா கொண்டுவந்த ஒரு திருத்தப் பிரேரணை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இந்த ஆறு உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியேறினர். 3-ம் வட்டார அங்கத்தவரால் ஆமோதிக்கப்பட்ட இத்திருத்தப்பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 1ம்,2ம்,3ம் 4ம்.5ம், 7ம்வட்டார அங்கத்தவர்கள் சாதகமாகவும் மற்ற 8 உறுப்பினர்கள் பாதகமாகவும் வாக்களித்தனர். இதைத்தொடர்ந்து மாதகல் கிராமத்தைச் சேர்ந்த 6 அங்கத்தவர்களும் உடனடியாக வெளிநடப்புச் செய்தனர்.

......

சுவாமி சாந்தானந்தஜி சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியா.

தாவடி இந்து இளைஞர் மன்றத்தினரின் வேண்டுகோளுக்கிணங்கி உலகப்புகழ் தவத்திரு சுவாமி சாந்தானந்தஜி இம்மாதம் 27-ந் திகதி காலை 6-30 மணிக்கு தாவடி சைவ விநாயகர் கோயில் முன்றலில் சொற்பொழிவாற்றுவார். அவரின் பஜனையும் முக்கிய அம்சமாக இடம்பெறும்.

......

மன்னாரில் காவல்படை

மன்னார், புதன்

மன்னார் கடைத்தெருவிற்குப் புதிதாக ஒரு காவற்படை நியமிக்கப்பட்டுள்ளது. மன்னார் கடைத்தெருவில் பலகாலமாகவே அடிக்கடி களவுகள் நடைபெற்று வந்துள்ளதைத் தொடர்ந்து இக்காவல்படை அமர்த்தப்பட்டது. "இலங்கை காவலர் சேவை" என்ற பிரிவு கடைத்தெரு காவல் வேலையை மேற்கொண்டுள்ளது. கடைகளிலிருந்து பெறப்படும் சந்தாப்பணத்திலிருந்து இவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

......

திறப்புவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

இன்று மாலை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா அரியாலை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கப் புதிய கட்டடத்தை திறந்துவைப்பார்.

மேற்படி கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. சு. அருளம்பலம் தலைமையில் நடைபெறும் இத்திறப்பு விழாவில் யாழ்ப்பாண மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா, யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. ஏச். சு. புல்லைநாயகம் உட்படப் பலர் உரையாற்றுவர்.

......

மாத்தளையில் அருள்விரிவுரை

யாழ்ப்பாணம், வியா

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் அடுத்த மாதம் 7-ம் திகதி மாத்தளை முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் அருள்விரிவுரையாற்றுவார். இங்கு தங்கும் போது சமய ஆக்கப்பணிகளிலும் சுவாமிகள் ஈடுபடுவார்.

இன்று

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் மகோற்சவம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்று மூன்றாம் திருவிழா உற்சவத்தின் போது சுவாமி கருட வாகனத்தில் வீதிவலம் வருவார். விசேஷ அபிஷேகமும், பூசையும் நடைபெறும்.

......

சாரணர்போட்டியில்

நெல்லியடி முதலிடம்

பருத்தித்துறை, புதன்

அண்மையில் பழைய பூங்காவில் நடந்த சாரணர் போட்டியில் சமூகசேவைக்கான முதற்பரிசை நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம் பெற்றது. இவ்வித்தியாலயத்தைச் சேர்ந்த சாரணர் தர்மராசா, கணேசராசா, செல்வநாயகம், ஜெகசோதி ஆகியோருக்கு மணிமுடி வழங்கப்பட்டது. இராணிச்சாரணராக எஸ் இராவணன், பி பாலராஜா, சிவப்பிரகாசம், சுகுமாரலிங்கம், சிதம்பரநாதன் வாமதேவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இராணிச்சாரணர் தொகைப்படி 3ம் இடத்தையும், 3ம் ரெட்டரி வெற்றிக் கேடயத்தையும் இம் மாணவர் பெற்றனர்

கிறீன்பீல்ட் கரபந்தாட்டம்

25-ம் திகதி இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விழாவை முன்னிட்டு விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வந்த கரபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இம்மாதம் 25-ம் திகதி மேற்படி கழக முன்றலில் 'மின்னொளி'யில் நடைபெறவிருக்கின்றது.

இவ் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி 'நவஜீவன்ஸ்' கழகமும், சங்கானை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (தே நி)

......

நோன்புகாலத்தில் புளுங்கல் அரிசி

யாழ்ப்பாணம், வியா.

நோன்புகாலமான ஒக்டோபர் 20ம் திகதி தொடக்கம் நவம்பர் 26ம் திகதிவரை கூப்பனுக்கு புழுங்கல் அரிசி யாழ். முஸ்லிம்களுக்கு வழங்கும்படி யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகசேவா சங்க செயலாளர் ஜனாப் எம். ஈ. ஷாஹுல் அரசாங்க அதிபரையும் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்துப்பேசி, மகஜர் சமர்ப்பித்ததன் பலனாக மேற்கூறப்பட்ட காலத்திற்கு புழுங்கல் அரிசி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சிகை அலங்காரம் செய்ய மறுத்தாராம்

வழக்குத் தாக்கல்

மாவிட்டபுரம் புதன்

சிறுபான்மைத் தமிழரான ஒருவருக்கு சிகைஅலங்காரம் செய்யமறுத்ததாக சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தின்கீழ் அச்சுவேலி சலூன் உரிமையாளர் ஒருவர்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அச்சுவேலி அம்மன்கோவிலடியைச் சேர்ந்த சலூன் பொறுப்பாளரான சரவணமுத்து சண்முகநாதன் என்பவர் வயாவிளானைச் சேர்ந்த கணபதி கதிரமலை என்பவருக்கு சிகைஅலங்காரம் செய்ய மறுத்ததாகக் குற்றம்சாட்டி ஒருவழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று தாக்கல்செய்யப்பட்டது.

மல்லாகம் நீதிபதி எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு அடுத்த மாதம் 15-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கொல்லங்கலட்டியில் உள்ள ஒரு சலூனுக்கு சிகை அலங்காரம் செய்யச்சென்ற சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த கப்பர் நாகமுத்து, மா தம்பிராசா ஆகியோரை சிகைஅலங்காரம் செய்யவிடாது தடுத்ததாக கந்தர் சின்னத்துரை, தவசி செல்லத்துரை சிதம்பரி சின்னத்துரை ஆகியோர்மீதும் ஒரு வழக்குத் தொடரப்பட்டது இவ்வழக்கு அடுத்தமாதம் 15-ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

வசாவிளானைச் சேர்ந்த நாகர் கந்தையா என்பவர் பலாலியைச் சேர்ந்த கதிரேசு என்பவரை சிகை அலங்காரம் செய்யவிடாது தடுத்ததாக ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இருளில் தெல்லிப்பழை

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழைகிராமசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

தெல்லிப்பழைக் கிராம சபையின் பகுதிக்கு மின்சாரம்வழங்கும் தெல்லிப்பழை சந்திக்கு அருகில் உள்ள மத்திய நிலையத்தில் ஏற்பட்ட சிலதடங்கலால் இணைப்பு தீப்பிடித்து சேதத்துக்குள்ளாகியதுடன் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இதனால் பலஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதுடன் தெல்லிப்பழை பகுதியே இருளில் மூழ்கியுள்ளது. மக்கள்வீதியில் நடமாட முடியாது கஷ்டமுறுகின்றனர்.

முத்தமிழ்விழா

உடுப்பிட்டி, புதன்

வரணி கலாமன்றத்தினரின் முத்தமிழ்க் கலைவிழா அடுத்தமாதம் 1ம், 2ம், திகதிகளில் சேனைப்பிட்டி கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது

வெள்ளை ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் பரிபூரண வெண்மையை அடையமுடியாது.

உங்களுக்குத் தேவையானது றெபின் நீலம்!

ROBIN
ULTRAMARINE BLUE
PACKED BY
RECKITT & COLMAN OF CEYLON LTD.

சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனால் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றெபின் நீலம் தேவை.

றெபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனால் முடிவில் றெபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

ஆடைகள் வெண்மையாகப பளபளப் பாகப் பிரகாசிக்க றெபின் நீலம் பாவியுங்கள்.

ஓர் றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

'நாத்திகர்களும்கூட கடவுளையே தேடுகிறார்கள்'

தியானத்தின் அவசியம்பற்றி சுவாமி சாந்தானந்தா

யாழ்ப்பாணம் புதன்

"மனிதராகப் பிறந்தவர் அனைவருக்கும் பொதுவாக மூன்று விருப்பங்களுண்டு. சாவதற்கு யாருமே விரும்புவதில்லை. சாசுவதமாக இருக்கவே எல்லோரும் விரும்புவர். எல்லாவற்றையும் அறிந்து கொள்ளவேண்டுமென்ற விருப்பம் இரண்டாவதாகும். எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டுமென்றும் யாவரும் விரும்புவர். இம்மூன்று விருப்பங்களையும் நாடியே மனிதர் யாவரின் வாழ்வும் செல்லுகிறது.

ஆனால் மனிதர் யாருக்கும் பூரணமாக இம்மூன்று விருப்பங்களும் கைகூடியதாகக் கூறமுடியாது. எப்போதும் அழியாமல் இருப்பவரும் எல்லாம் அறிந்தவரும், என்றும் ஆனந்தமாக இருப்பவரும் கடவுள்தான். சத், சித், ஆனந்தம் என்ற அக்கடவுளையே எல்லோரும் நாத்திகர் உட்பட அவர்களையும் அறியாமல் நாடிச் செல்லுகின்றனர்."

என்றிவ்வாறு சுவாமி சாந்தானந்தா நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் செய்த முதல் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். மண்டபம் நிறைய மக்கள் கூடியிருந்தார்கள். பேசுமுன்பாக சுவாமி அவர்கள் இனிமையாக முக்கால் மணி நேரம் பஜனை செய்தார், ஆங்கிலப் பேச்சு பலருக்கு விளங்காவிடினும், அமைதியாக இருந்து கேட்டனர். சுவாமி மேலும் கூறியதாவது:-

நீ என்ன செய்கிறாய்? என்று யாரும் கேட்டால், என் தம்பி எம். ஏ. பாஸ் செய்திருக்கிறான். எங்கள் அப்பா நீதியரசராக இருந்தார் என்று பதிலளிப்பது எப்படி இருக்கும்? அதுபோல் மாணிக்கவாசகர் அப்படிப் பாடியுள்ளார், திருஞானசம்பந்தர் தேவாரம் இப்படிக் கூறுகிறது என்று தேவார திருவாசகங்களைப் பற்றிக் கூறுவதில் பயன் இல்லை அப்பாடல்களில் அவர்கள் கூறியுள்ளதுபோல் நாம் நடக்கிறோமா என்பதே கேள்வி. என்றும் உள்ளவரும், எல்லாம் அறிந்தவரும், ஆனந்தமயமாகவும் உள்ள சத் சித் ஆனந்த ஸ்வரூபியான கடவுள் நமக்குள்ளேயே மறைந்திருக்கிறார். அவர் நமக்குள்ளே இருப்பது தெரியாமல், இன்பத்தைத் தேடி வெளியேஎங்கெங்கோ அலைகிறோம். நமக்குள் இருக்கும் அச்செம்பொருளை தியானத்தின்மூலம் அடையலாம் என்றார்.

திவ்ய ஜீவன சங்கத் தலைவர் திரு. தனபாலசிங்கம் சுவாமிஜியை வரவேற்றுப் பேசினார். காரியதரிசி திரு. கனகரத்னம் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். சுவாமி பேசி முடிந்தபின் சில நிமிடங்கள் எல்லாரையும் கண்ணை மூடிக்கொண்டு அமைதியாக மனம்குவிந்து தியானம் செய்யச் சொன்னார். நேற்று முன்தினம் காலை 6 முதல் 7மணி வரை அதே மண்டபத்தில் தியான வகுப்பு நடைபெற்றது. 'மனம் ஒரு குரங்கு அதற்குத் தேள் கொட்டிவிட்டது. கள்ளையும் குடித்தது. அதற்குப் பேயும் பிடித்தது. அப்படியாயின் குரங்கின் நிலை எப்படி இருக்கும்? அதுபோல் நம்மனம் அகம்பாவத்தாலும் ஆசைகளாலும், பணம், கல்வி, பதவி முதலிய செருக்குகளாலும் பீடிக்கப்பட்டு நிலையற்றுள்ளது. 'நாமறியேன் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ண' வேண்டுமென்று இறைவன் அருளை வேண்டின் தியானம் கைகூடும். என்று தியான வகுப்பில் சொல்லித் தியானம் செய்யும் முறைகளை மறுநாள் விளக்குவதாகச் சொன்னார் சுவாமிகள். சுவாமியின் பஜனை, பேச்சு, தியான வகுப்பு முதலியவை பலருக்குப் பயன்படுகின்றன. அவர் சிறிது தமிழிலும் பேசினால் இங்கு எல்லாருக்கும் பயன்படுமென்று பொதுவாகக் கருத்து நிலவுகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 23—9—71

(செய்திகள்: காலை 6-30. பகல் 12-45 மாலை 6-00. இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 திருப்பாடல்கள், 7-30 மெல்லிசை 8-00 இசைச்சோலை, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 ஓடிவிளையாடு பாப்பா, 6-35 வெண்ணுலகம், 7-00 தமிழ் மூலம் சிங்களம், 7-15 சக்திவாரம் கட்டுரை அம்சம், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-25 திகதிக்கும் திருமறை, 8-40 நினைவு முத்துக்கள், 9-30 இசை அரங்கம், 10-30 செய்தித் தொகுப்பு.

......

சில்வர் ஸ்டார் வெற்றி

சுழிபுரம், புதன்

அராலி சில்வர் ஸ்டார் கோஷ்டிக்கும் சித்தன்கேணி இளைஞர் கழகக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற வலிமேற்கு விளையாட்டுக் கழகங்களின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அராலி சில்வர்ஸ்டார் கோஷ்டியினர் ஐந்து கோல்களைப்போட்டு வெற்றிபெற்றனர். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஜே. சவரிமுத்து மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

விபத்து

பருத்தித்துறை புதன்

கடந்த ஞாயிறன்று ஒரு லொறியும் வானும் இ.போ.ச பஸ் வண்டியும் மோதியதால் வான் பலத்த சேதத்துக்குள்ளாகியது. பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு முன் இவ்விபத்து ஏற்பட்டது. பஸ்வண்டியின் முற்பக்கமும் சேதமடைந்தது. பிரயாணிகள் எவ்வித காயமுமின்றித் தப்பினர்.

......

உடுப்பிட்டி, புதன்

கோப்பாய் நாவலர் இந்து பாடசாலைத் தலைமையாசிரியர் திரு மு. வல்லிபுரம் கரணவாய் விநாயகவித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கேள்வி விளம்பரம்

மட்டக்களப்பு பல நோ. கூ. சங்கத்திற்கு காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் 4500 அந்தர் சீமெந்து ஏற்றித் தருவதற்கு வாகனச் சொந்தக்காரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களை அனுப்புவோர் 5-10-71 திகதிக்கு முன் விபரங்கள் கீழ் குறிப்பிடும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 'சீல்' வைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொது முகாமையாளர்
165, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

3037

நவராத்திரி
சரஸ்வதி பூஜைக்கு
தேவையான

- ★ விளைவுகூடம்
- ★ அபிஷேக திரவியங்கள்
- ★ அபிஷேகச் சந்தனம் (உடன் பத்திரத்தினால் அரைக்கப்பட்டது)
- ★ அபிஷேகக் குங்குமம்
- ★ அபிஷேக விபூதி
- ★ அபிஷேக வாசனைதிகள்
- ★ கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
- ★ நைவேத்தியப் பொருள்கள் (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்
சகல சாமான்களும் நிதானமான விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

கடந்த 38 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்

எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்)

53, கே. கே. எஸ். ரோட்,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.
போன்: 541 Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
போன்: 35825

வசாவிளான் கொலை வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு

மாவிட்டபுரம், புதன்

வசாவிளான் கொலை வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது.

வசாவிளானைச் சேர்ந்த இளைஞன் சிவனடி என்பவரை பொல்லால் தாக்கிக் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டி ஏழாலையூரைச்சேர்ந்த ஆறுமுகம் நடேசன் என்பவர் மீது காங்கேசன்துறைப் பொலிசாரால் இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிபதி எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் கடந்த ஒருமாதமாக விசாரணை நடைபெற்றுவந்த இவ்வழக்கில் பாடசாலை மாணவன் சுந்தரமூர்த்தியும் சுழிபுரத்தைச்சேர்ந்த இராசையாவும் சம்பவத்தைக் கண்டதாக சாட்சியமளித்தனர்.

இதையடுத்து நீதிபதி வழக்கைசுப்ரீம்கோர்ட்விசாரணைக்கு பாரப்படுத்துவதாக உத்தரவிட்டார்.

வழக்காளி தரப்பில் வழக்கறிஞர் ஆர் ஜே செல்வரத்தினமும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் சிவஸ்ரீதரனும் ஆஜராகியிருந்தனர்.

நாடெங்கிலும்

தொடர்ந்து மழை!

கோட்டை, புதன்

கடந்த 24 மணி நேரமாக வடமாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கடும் மழை தொடர்ந்து பெய்துள்ளது. தென் மேற்குப்பகுதியில் சாதாரணமழை பெய்துள்ளதாகவும் அவிசாவளை, களுத்துறை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் புயலோடு கூடிய மழைபெய்துள்ளதாகவும் கொழும்பு அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அவிசாவளையிலிருந்து சுமார் 45 மைல் தூரத்திற்கு 2அடி நீர் வெள்ளம் பெருக்கெடுத்து நிற்பதனால் அப்பகுதிகளில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. புலத்சிங்கள, கலவான பகுதிகளும் வெள்ளத்தில்மூழ்கியுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாண், பால்மா ஆகியவைகளை விநியோகித்து அரசாங்கத்துடன் ஒத்துழைக்க கூட்டுஸ்தாபனங்களும், தனியார் ஸ்தாபனங்களும் முன்வந்துள்ளன.

"தெல்லிப்பளை சுகாதார நிலையத்தை இடமாற்றாதீர்"

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை சுகாதார நிலையத்தை காங்கேசன் துறைக்கு மாற்றும் திட்டத்தைக் கைவிடும்படி சுகாதார அமைச்சருக்கு அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் அமைந்துள்ள சுகாதாரநிலையத்தை இம்மாதம் 24ம் திகதிமுதல் காங்கேசன்துறை வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள வைத்திய விடுதிச் சாலைக்கு மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

"வலி-வடக்குக் காரியாதிகாரி பிரிவில் உடுவில், மல்லாகம், சுன்னாகம், காங்கேசன்துறை இளவாலை, வசாவிளான் ஆகிய இடங்களுக்கு மத்தியில் தெல்லிப்பழையில் இந்நிலையம் தற்போது அமைந்துள்ளது. சகல பகுதி மக்களது போக்குவரத்திற்கும் இந்த இடம் வசதியாக இருப்பதால் இந்நிலையத்தை இடம்மாற்றுவதைக் கைவிடுமாறு மல்லாகம், தெல்லிப்பழை, ஏழாலைக் கிராமசபைகள் உட்பட மற்றும் பல உள்ளூராட்சி மன்றங்களும் பொதுஸ்தாபனங்களும் சுகாதார அமைச்சரை தந்திமூலமும் மகஜர் மூலமும் கோரியுள்ளன.

இப்பகுதியிலுள்ள பொதுமக்களும் ஒன்றுசேர்ந்து தனியாக சுகாதாரப்பகுதிக்கு விரிவான மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பழைக்கு இம்மாதம் முதல் மாற்றப்படுவதையொட்டியே சுகாதார நிலையத்தை அரசாங்கம் காங்கேசன் துறைக்கு மாற்ற விரும்புவது குறிப்பிடத் தக்கது.

நாகநாதனுக்கு

இரங்கல் பூசை

யாழ்ப்பாணம், வியா.

காலஞ்சென்ற டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ்ப்பாணம் 5-ம் வட்டார வாலிபர்கள், இம்மாதம் 28-ம் திகதி காலை யாழ்ப்பாண மேற்றிராசனக் கோவிலில் ஓர் இரங்கல் பாடற்பூசையை நடாத்தவிருக்கின்றனர். (தே நி)

......

சுகாதார மந்திரி வருகிறார்

மாவிட்டபுரம் புதன்

சுகாதார அமைச்சர் டபிள்யு. பி. ஜி. ஆரியதாச இம்மாதம் 30-ம் திகதி வடபகுதிக்கு உத்தியோகபூர்வமானவிஜயமொன்றை மேற்கொள்கிறார்

மக்கள் அரசு பதவி ஏற்றபின் வடபகுதிக்கு முதன்முறையாக வரும் சுகாதார அமைச்சர் தெல்லிப்பழையில் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அரசினர் வைத்தியசாலையைத் திறந்துவைப்பார்.

காதல் ஜோடி தற்கொலை

நாவலப்பிட்டி, புதன்

25 வயதான சிங்கள நபரும் 21 வயதான தமிழ் யுவதியும் தற்கொலைசெய்து கொண்ட சம்பவம் நாவலப்பிட்டியிலுள்ள கடியனா எனுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

தமது மகன் முன்பு விவாகமானவரென்றும், அவருக்கு மூன்று குழந்தைகள் இருப்பதாகவும் இவர்களது தொடர்புகள் பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாதென்றும் இறந்த இளைஞனின் தந்தை மரண விசாரணையில் தெரிவித்தார்.

இவ்விருவரிடையேயும் நெருக்கமான தொடர்பு இருந்துவந்ததாகவும் சம்பவதினம் இருவரும் படம் பார்க்கச் சென்றதாகவும், மறுதினம் தாம் பார்த்தபோது அறையில் இருவரும் இறந்துகிடக்கக் காணப்பட்டதாகவும் யுவதியின் தாயார் சாட்சியத்தின்போது தெரிவித்தார். மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். விமலசேன நஞ்சு குடித்ததில் உண்டான மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

மணிவாக்கு

பகைவர், அயலோர், நட்பினர் என்னும் இம் மூவகையோரிடத்தும் தருமத்தின் வழுவாமல் ஒப்பநிற்றல் நடுவுநிலைமை எனப்படும்.

— நாவலர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் புரட்டாதி மாதம்
7-ந் திகதி (23-9-71)

செனேட்சபை

இன்றுதான் செனேட்சபை கடைசியாகக் கூடுகிறதென்றும் இனி அச்சபையே இல்லாமற் போய்விடுமென்றும் சொல்லப்படுகிறது. அவ்விதம் செய்யப்படுமாயின் அதுகுறித்து இந்நாட்டில் பொதுமக்கள் விசேஷ வருத்தமோ அடையமாட்டார்கள்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் அவசரப்பட்டு முன்யோசனை இன்றி மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டால் அவை அப்படியே சட்டமாகிவிடாமல் அவைபற்றி மீண்டும் யோசனை செய்து பார்க்கும் அந்நிலை செய்யப்படாமல் பாதுகாக்கவே இரண்டாவது சபையை சோல்பரிக் கமிஷனர்கள் அமைத்தனர். ஆனால் சென்ற 20 வருடகாலத்திலும் நடந்துள்ளவற்றை நினைத்துப் பார்ப்பின் அக்கமிஷனின் நோக்கத்தை அச்சபை நிறைவேற்றத் தவறிவிட்டதென்றே கூறவேண்டும். செனட்டர் நடேசன் போன்றவர்கள் அரசியல் ஞானத்துடன் பல அரிய பிரசங்கங்களை அச்சபையில் செய்துள்ளது உண்மை. ஆனாலும் அப்பேச்சுகள் செவிடன் காதில் ஊதிய சங்கநாதமாகவே இருந்துள்ளன.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் அச்சபையில் அரசாங்கக் கட்சிக்கு மெஜாரிட்டி பலமில்லை. அரசாங்கம் கொண்டுவந்த பல முற்போக்கான மசோதாக்களுக்கு முட்டுக்கட்டை போடும்விதத்திலேயே அச்சபை காரியங்கள் செய்து வந்ததால் அரசாங்கம் அச்சபையை அவசரப்பட்டுக் கலைக்க நடவடிக்கையெடுத்தது. இதில் விசேஷமில்லை: செனேட்சபைக்கு மெம்பர்களை நியமிக்கும் விஷயமாகவும் சில புகார்களுண்டு. விரும்பத்தகாதவர்கள் சிலரும் அச்சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எந்த நோக்கத்துடன் அச்சபை ஏற்பட்டதோ அது நிறைவேறாத நிலையில் அச்சபை ஒழிக்கப்படுவதைப் பற்றி யாரும் கண்ணீர்வடிக்கத் தேவையில்லை.

ஆனால் ஜனநாயக அமைப்பிலே இரண்டாவது சபைகளுக்கு அவை சரியாக அமைக்கப்பட்டால் இடமுண்டுதான். தொழில்வாரியாக நியமிக்கப்படும் பல அனுபவஸ்தர்கள் தங்கள் யோசனைகளைத் தெரிவித்து உதவ முடியும். என்றாலும் புதிய அரசியலமைப்புப்பற்றிய திட்டத்தில் ஒரேசபை இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றப்படும் அந்த அரசியல் அமைப்புச் சட்டப்படி, செனேட்சபைக்கு இடமில்லை. அதற்கிடையே அச்சபையை ஒழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டதாயின் அச்சபையிலுள்ள சிலரே அதற்குப் பொறுப்பாக வேண்டும். அச்சபை இதுவரை பயனுள்ள பணி எதுவும் செய்யத்தவறி, அது தனக்குத் தானே குழிதோண்டிக் கொண்டுவிட்டது.

செனேட் ஒழிப்பு மசோதா சட்டப்படி செல்லாதென்றும் இவ்விஷயமாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுமென்றும் கூறப்படுகிறது. இது எப்படியாயினும் இலங்கையின் புதிய அரசியலில் இச்சபை இருக்கப் போவதில்லை. ஒருசில மாதங்களுக்குப் பின் மறைய வேண்டிய சபை முன்கூட்டியே கலைக்கப்படுகின்றது. அவ்வளவுதான்.

சித்திரமும், சங்கீதமும் கட்டாய பாடமாகும்!

உதவி கல்வி அமைச்சர் தகவல்

கோட்டை, புதன்
'அடுத்த ஆண்டிலிருந்து சகல பாடசாலைகளிலும் ஆறும் வகுப்புக்குமேல் சித்திரமும் சங்கீதமும் கட்டாய பாடமாக்கப்பட விருக்கின்றன.'

இவ்வாறு கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. வை. துடாவை கொழும்பில் நடைபெற்ற சிறுவர் கண்காட்சி ஒன்றில் கலந்துரையாற்றும்போது குறிப்பிட்டார். இவ்விழாவைக் கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் திறந்துவைத்தார். இவ்விழாவில் 800 சிறுவர் சித்திரங்களும், 800 சிறுவர் சிற்பங்களும் வைக்கப்பட்டிருந்தன.

வைத்தியசாலைக்கு மேலும் வசதிகள்

உடுப்பிட்டி, புதன்
வடமராட்சிப் பகுதி நோயாளர்களின் சௌகரியத்தை முன்னிட்டு உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடியின் விடாமுயற்சியின் பயனாக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒக்டோபர் மாதம் பல முன்னேற்ற சிகிச்சை வசதிகள் அமுல் செய்யப்படவிருக்கின்றன.

உடுப்பிட்டி, புதன்
கரவெட்டி கிழக்கு கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தமிழ்ப் பாடசாலையில் தலைமையாசிரியர் திரு. மு. வேலுப்பிள்ளை தலைமையில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இப்பாடசாலையில் நவராத்திரி விழா கொண்டாடப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" டினருக்காக [illegible]ரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சாந்தானந்தஜி பருத்தித்துறை விஜயம்

பருத்தித்துறை, வியா.
சுவாமி சாந்தானந்தஜி மகராஜ் நாளை மாலை பருத்தித்துறை தச்சன்கலட்டியில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமத்தைத் திறந்துவைப்பார். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகள் துதிப்பாடல்கள் பாடுவர். சுவாமி சாந்தானந்தஜி மகராஜின் பஜனையும் ஆசியுரையும் இடம்பெறும்.

இன்று

யாழ்ப்பாணம், வியா.
வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் நவராத்திரி 4-வது தினமாகிய இன்று மாலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை நல்லை ஞானசம்பந்த ஆதீனகர்த்தாவாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் 'அன்னை அகிலாண்டேஸ்வரி' என்ற பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7 மணிக்கு கொலு அம்மன் பூஜையும் நிகழும்

······

இனஒழிப்பு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கிறது.

பின்வரும் பிரேரணையையும் கொண்டுவர திரு. என். வி. செல்லத்துரை முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். யாழ்ப்பாணத்தில் சிறப்பாக எனது வட்டாரத்தில் வாழக்கூடிய சிங்களப்பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு சிங்கள மொழி மூலம் விஞ்ஞானப் பாடங்களைப் போதிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்கள மகாவித்தியாலயத்தில் ஆய்வுகூட வசதிகள் இல்லாது கஷ்டமடைகிறார்கள். எனவே மேற்படி சிங்கள மகாவித்தியாலயத்தில் போதிய விஞ்ஞான ஆய்வுகூடங்கள் உடன் அமைப்பதோடு விஞ்ஞானம் போதிப்பதற்கு தராதரம் பெற்ற ஆசிரியர்களையும் மேற்படி கல்லூரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று இம்மன்றம் கல்வி அமைச்சரை கேட்டுக்கொள்கிறது.

உதவிகளால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடித்தீர்வு காண முக்கியமாகச் செய்ய வேண்டியது என்னவெனில் இந்த சங்கம் உடனடியாகத் தலையிட்டு முஜிபுர் ரஹ்மானை விடுதலை செய்விக்க வேண்டும்.

உலகம் இதுவரை காலமும் போரையும் அதனால் ஏற்பட்ட பல கஷ்டங்களையும், உயிர்சேதம், பொருட்சேதத்தையும் போதியளவு கண்டுவிட்டது. வியட்னாம் சம்பவங்கள் மத்திய கிழக்கு பூசல்கள் யாவும் மறைமுகமாகவோ நேரடியாகவோ பெருந்தொகையான மக்களைப் பாதித்துள்ளது. உலக நிறுவனம் போன்ற இத்தகைய நிறுவனம் இவற்றிற்கெல்லாம் முற்றுப் புள்ளிவைத்து அமைதிக்கு உடனடி முயற்சி செய்ய வேண்டும்.

ஞாபகார்த்தம்

செல்லன் வெ. கந்தசாமி அவர்கள் 14-8-71 சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் 1969ம் ஆண்டு சர்வோதய சனசமூக நிலையத்தின் தலைவராகவும், தொடர்ந்து மூன்றாண்டுகள் பூப்பிற்றர் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும் இருந்து சிறப்புப்பணி ஆற்றியுள்ளார். அன்னாரின் அந்தியேஷ்டி தினமாகிய 23-9-71 இன்று அவரின் ஆத்மசாந்தியடையப் பிரார்த்திப்போமாக! சர்வோதய சனசமூகநிலையத்தினர். 3606

புகையிரதப் பகுதி

சொந்த இடங்களை வாடகைக்குவிட முடிவு

கோட்டை, புதன்
இலங்கைப் புகையிரதத் திணைக்களம் தமக்குச்சொந்தமான இடங்களை வாடகைக்குவிட முடிவுசெய்துள்ளது. இதற்கான திட்டமொன்றை போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனா தயாரித்துவருவதாகத் தெரிகிறது. இவ்விதம் இடங்களை வாடகைக்கு விடுவதினால் புகையிரதப் பகுதிக்கு பெருந்தொகை வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக புகையிரதப் பகுதி நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இப்புதிய திட்டத்தினால் இப்பகுதியின் நஷ்டத்தைக்குறைக்கலாமெனக் கருதப்படுகிறது.

புகையிரதப் பகுதிக்குச் சொந்தமான நிலங்களில் சட்டவிரோதமாகக் குடியேறுவதைத் தடுக்கவும் அமைச்சு புதிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறது

நிலங்களை வாடகைக்கு விடுவதுபற்றி புகையிரதப் பகுதி தொழிற்சங்கவாதிகளின் கருத்தும் அறியப்படுகிறது. இதுபற்றி இறுதி முடிவு செய்யப்படும்வரை புகையிரதப்பகுதிக்குச் சொந்தமான நிலங்களை வாடகைக்கு விடுவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது

விலைவாசி உயர்வினால் மக்கள் அவதிப்படுகின்றனர்

— இச்சிலான்

கொழும்பு, புதன்
நாட்டில் விலைவாசி உயர்ந்துவருவதினால் பொதுமக்கள் பெரும் இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளனர். இதனால் சத்தான உணவை அவர்களால் பெறமுடியாதிருக்கின்றது என்று செனட்டில் "அரசாங்கம் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தது போல வாழ்க்கைச்செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை" என்று கூறும் எதிர்க்கட்சியின் பிரேரணை மீது பேசிய எதிர்க்கட்சி செனட்டர் திரு. எம். டி. இச்சிலான் கூறினார்.

இப்பொழுது வாழ்க்கைச் செலவு 141 புள்ளிகளுக்கு மேல் சென்றுவிட்டது என்று திரு. இச்சிலான் கூறிய பொழுது, அரசாங்க செனட்டர் திரு. விஜயகுணசூரியா குறுக்கிட்டு, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்தை ஒப்பிடுகையில் இது சிறிதே என்றார். இதற்கு இச்சிலான் பதிலளித்துப் பேசியபோது, ஐ. தே. கட்சியின் அரசாங்க காலத்தில் பொதுமக்களின் பெரும்பாலான பாவனைப் பொருள்களின் விலையையும் இப்பொழுதுள்ள விலைகளையும் எடுத்துக்காட்டினர்.

இன்று செனட் கூடிய பொழுது ஒழுங்குப்பத்திரத்தில் மூன்றாவது இடத்தில் இருந்த வாழ்க்கைச்செலவு பற்றிய எதிர்க்கட்சியின் தீர்மானம் விவாதத்திற்கு முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஒழுங்குப் பத்திரத்தில் முதல் இரு இடங்களைப் பெற்றிருந்த அவசரகால நிலைமை நீக்கப்படும்வரை அரசியல்நிர்ணயசபைக் கூட்டங்களை ஒத்திவைக்கும்படி கேட்டுக்கொள்ளும் எதிர்க்கட்சியின் தீர்மானமும் தனியார் நிறுவனங்கள் பற்றிய தீர்மானமும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(பி. பி. ஏ.

மாசேதுங் நலத்துடன் இருக்கிறார்

பீக்கிங், செப். 22
சீனத் தலைவர் மாசேதுங் தேகநிலை நன்றாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது தேகநிலைபற்றி பல வதந்திகள் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. வரும் ஒக்டோபர் மாதம் சீனாவின் தேசியவிழா பீக்கிங்கில் கொண்டாடப்படமாட்டாது என்ற அறிவிப்பை வைத்தே பெரும்பாலும் சீனத் தலைவர் பற்றிய வதந்திகள் எழுந்தன. ஆனால் தேசியவிழாவை ஆடம்பரமாகக் கொண்டாடுவதில்லை என்ற அரசின் முடிவை அடுத்தே பீக்கிங்கில் இம்முறை இவ்விழா கொண்டாடப்படமாட்டாதென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்டி சிந்தாத்திரை மாதா திருநாள்

யாழ்ப்பாணம், வியா.
வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெறுகிறது. இன்று மாலை வேஸ்பர் ஆராதனையும் விசேஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறும். நாளைக் காலை பெரிய பாடற் பூசையை அடுத்து திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் உற்சவம் முடிவடையும்

பொருளாதார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

நடேசன் கூறினார்

அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த பயங்கரவாதத்தை நாம் அறிவோம். அவசரகால அதிகாரத்தைக் கொண்டு இவ்வித நடவடிக்கையை அரசாங்கம் எடுப்பது புதிதல்ல. தடுத்துவைக்கப்பட்டவர்கள் விஷயத்தில் அரசாங்கம் எவ்விதம் நடந்துகொள்ளப்போகிறது என்பதுதான் கேள்வி. இந்தப் பயங்கரவாத இயக்கத்திற்கு மூலகாரணம் பொருளாதாரப் பிரச்னைகளும் மற்றும் பிரச்னைகளும் தீர்க்கப்படாமையேயாகும். எனவே குற்றமற்றவர்களை உடன் விடுதலைசெய்ய அரசாங்கம் முன்வருவதோடு நம்பிக்கையுடனும் தாராளமனப்பான்மையுடனும் நடந்துகொள்ள வேண்டுமென்றார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் பயங்கரவாதிகள் மீது கூடியவிரைவில் விசாரணைசெய்ய அரசாங்கம் முயற்சிசெய்துவருகிறது குற்றம் நிரூபிக்கப்படாதவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவர்என்று உறுதியளித்தார்.

செனட்டர் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில், கோட்டாமுறையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என அண்மையில் கல்வி அமைச்சர் விடுத்த பத்திரிகைப் பேட்டி பற்றிக் குறிப்பிட்டு பல்கலைக்கழகத்தில் சேரவிரும்பும் மாணவர்களுக்கும் புத்திக்கூர்மையுள்ள மாணவர்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு பல்கலைக்கழக கதவுகள் மூடப்படக்கூடாதென்றார்.

(பி. பி. ஏ)